5595/2022

அனுப்புநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வளர்ச்சிப்பிரிவு,
கிருஷ்ணகிரி.

பெறுநர்

உதவிஇயக்குநர்,
ஊராட்சிகள்,
கிருஷ்ணகிரி.

ந.க.எண்.17837-2018-கே2, நாள்:27.10.2022.

அய்யா,

பொருள் : **பணியமைப்பு** - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - கிருஷ்ணகிரி மாவட்டம் - உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் - **புவன்குமார் (திரு) ரா** - கருணை அடிப்படையில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டது - அரசாணை மற்றும் அசல் சான்றுகள் பெறப்பட்டது - அனுப்பிவைத்தல் - தொடர்பாக.

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் 27.10.2022 கிருஷ்ணகிரி.

பார்வை:
1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ந.க.எண்.17837-2018-கே2, நாள்:20.04.2022.
2. அரசாணை (4ப) எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5)துறை, நாள்:14.09.2022.
3. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.25045-2021-டி1, நாள்:03.10.2022.

---0000---

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், மாவட்ட ஆட்சியரகம், சிறுசேமிப்பு அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து வந்த திரு.அ.ராஜேந்திரன் என்பவர் உடல்நலக்குறைவின் காரணமாக 21.12.2016 அன்று பணியிடைக்காலமானதைத் தொடர்ந்து, தனியரது மகனும் வாரிசுதாரருமான திரு.ரா.புவன்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியிடம் அளிக்கப்பட்டு 06.05.2020 முற்பகல் பணியில் சேர்ந்து, தற்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், கிருஷ்ணகிரியில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி தனியருக்கு பணிவரன்முறை செய்து அரசாணை பெற்றிட முன்மொழிவுகள் மற்றும் கூடுதல் விவரங்கள் ஆகியவை பார்வை (1)-இன்படி ஆணையர், ஊ.வ. அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டதில், பார்வை (2)-இன்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 06.05.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

*(...2..)*

மேலும் பார்வை (3)-இல் காணும் கடிதத்தில் தனியர் திரு.ரா.புவன்குமார் தொடர்பான கல்விச்சான்றுகள் அசல் மற்றும் அரசாணை ஆகியவை கீழ்க்கண்டவாறு இணைத்து பெறப்பட்டுள்ளது.

| Sl. No. | Certificates | Reg No | Serial No. |
|---|---|---|---|
| 1. | SSLC Mark Sheets | 1454280 | SEC-8001517, Mar-2017 |
| 2. | B.A., English | 696/2019-2020 | 1912 |

எனவே **திரு.ரா.புவன்குமார், இளநிலை உதவியாளர்** என்பவர் பொருட்டு வெளியிடப்பட்ட கல்விச்சான்றுகள் மற்றும் அரசாணை சார்வு நகல் ஆகியவற்றினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் எனவும், பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பிவைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இணைப்பு:** அரசாணை - சார்வு நகல்
கல்விச்சான்றுகள் - அசல்

மாவட்ட ஆட்சியருக்காக,
கிருஷ்ணகிரி.

27/10/22

வளர்ச்சிப்பிரிவு,
மாவட்ட ஆட்சியரகம்,
கிருஷ்ணகிரி.

மே.எ.ந.க.எண்.17837-2018-கே2, நாள்: 27.10.2022.

"அரசாணை (4ப) எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5)துறை, நாள்:14.09.2022."

- அசல் ஆணை சார்வு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
கிருஷ்ணகிரி.

பெறுதல்

திரு.ரா.புவன்குமார்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி.

(37)

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம்.– பணியில் இருக்கும் போது காலமான ஈப்பு ஓட்டுநர், திரு.அ.ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு.ரா. புவன்குமார், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (4ப) எண். 46

நாள்: 14.09.2022
சுபகிருது ஆவணி, 29
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.கே2/17837/2018, நாள் 04.05.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.25045/2021/டி1, நாள் 20.05.2022.

-----------

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், மாவட்ட ஆட்சியரகம், சிறுசேமிப்பு பிரிவில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து 21.12.2016 அன்று பணியிடைக்காலமான திரு.அ.ராஜேந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ரா.புவன்குமார் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி, கருணை அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 06.05.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன். திரு.ரா.புவன்குமார் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 25.10.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 16.10.2001 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 ஆண்டுகள் என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. ரா. புவன்குமார் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், இளநிலை உதவியாளராக 06.05.2020 முற்பகல் முதல் தனியர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்22.7.2022 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.13606/ட்டி1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.2851773/G1/2022, நாள் 03.08.2022ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
திரு.ரா.புவன்குமார், இளநிலை உதவியாளர் .
ஊரக வளர்ச்சிப் பிரிவு, கிருஷ்ணகிரி மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.